| O.S No. | : | 7/2020 |
|---|---|---|
| DATE | : | 01.08.2025 |
| NAME | : | சாந்தி |
| கணவர் பெயர் | : | ராதாகிருஷ்ணன் |

**பிரதிவாதி தரப்பில் வா.சா.1 குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

5. 2019ல் நான் தாவா சொத்தை அடமானம் வைக்க சென்றபோது தான் செட்டில்மெண்ட் பத்திரங்கள் ரத்தான விவரத்தை தெரிந்து கொண்டேன். அது சம்மந்தமாக வழக்கறிஞர் அறிவிப்பு உடனே அனுப்புனேனா என்றால் இல்லை. தாக்கல் செய்த விடுதலை பத்திரத்தை பற்றி எனக்கும் எனது கணவருக்கும் மட்டும் தான் தெரியும் என்று சொன்னால் சரிதான். அந்த ஆவணத்தை நான் படித்து பார்த்துள்ளேன். அந்த விடுதலை பத்திரத்தில் கொடுக்கப்பட்ட 55 லட்சத்தை பற்றி குறிப்பிட்டு சொல்லியுள்ளோம். பணம் பரிவர்த்தனை பற்றிய விவரத்தை பதிவாளரிடம் சொல்லியுள்ளோம். வா.சா.ஆ.1 விடுதலை பத்திரத்தின் சான்றிட்ட நகல் தான் தாக்கல் செய்துள்ளோம், அதன் அசல் ஆவணம் காணவில்லை. மேற்படி அசல் ஆவணம் காணவில்லை என்ற விவரத்தை எனது வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

6. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 விடுதலை பத்திரத்தில் பக்கம் 4ல் ரூபாய்க்கு பிறகு இடம் காலியாக விடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் சொல்வது போல எந்த பணமும் கொடுக்கவில்லை அதனால் தான் அந்த ஆவணத்தை ரத்து செய்துவிட்டார்கள் என்று சொன்னால் சரியல்ல. செட்டில்மெண்ட் பத்திரம் ரத்து செய்யப்பட்ட விவரம் மற்றும் ரத்து ஆவணத்தை பற்றிய விவரம் எனக்கு தெரியும், தெரிந்து தான் நாங்கள் சேர்ந்து வசித்து வந்தோம் தற்போது வேண்டுமென்றே வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்து தற்போது கூட்டுக் குடும்ப சொத்தாக எங்களது அனைவரின் கூட்டு அனுபவித்தில் இருக்கிறது அனைவருக்கும் தாவா சொத்தில் பங்கு உள்ளது என்று சொன்னால் சரியல்ல, நானும் எனது

மாமியாரும் எனது மூத்தாரும் தான் சேர்ந்து வசிக்கிறோம் வேறு யாருக்கும் பங்கு கிடையாது.

7. வில்லங்கம் 2019ல் பார்த்தேன் அந்த சான்றிதழை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனது வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். தாவா சொத்து சம்மந்தமாக 2019ல் தான் கடைசியாக தகராறு ஏற்பட்டது. தகராறு சம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுக்கவில்லை. ஏமாற்றி ரத்து செய்துவிட்டார்கள் என்ற விவரத்தை குறிப்பிட்டு நான் தாவாவிலோ பிரமாண வாக்குமூலத்திலோ குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அன்பினால் தான் விடுதலை பத்திரம் எழுதப்பட்டதாகவும் மேற்படி ஆவணத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

8. இவ்வழக்கில் பிரதிவாதிகள் தாக்கல் செய்த பதிலுரையை படித்து பார்த்து நான் தெரிந்து கொண்டேன். தாவா சொத்தில் எனக்கு மட்டும் தான் உரிமை உண்டு என்ற விவரத்தை பதிலுரையில் மறுத்துள்ளார்கள் அதனை நான் தெரிந்து கொண்டேன். ஆகவே பிராதை திருத்தி விளம்புகை பரிகாரம் தாக்கல் செய்ய நான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. விளம்புகை பரிகாரம் கோராமல் வெறும் உறுத்துக் கட்டளை கேட்டுள்ளதால் இந்த வழக்கு நிலைகக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. இந்த வழக்கு காலதோஷத்தாலும் பாதிக்கப்பபட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. ஆகவே இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை இத்துடன் முடித்து கொள்ளப்படுகிறது.**

(S/d.Fanny Rajan)
Principal District Munsif,
Kancheepuram